செ.வெ.எண்: 25 நாள்: 18.06.2020

கரூர் மாவட்டம்

**ஊரக புத்தாக்கத் திட்டத்தின் மூலம் 14 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் மற்றும் 14 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ரூ.42 லட்சம் மதிப்பிலான கொரோனா சிறப்பு நிதி உதவித் தொகுப்பினை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள் வழங்கினார்.**

அதன் விபரம் வருமாறு:

கரூர் ஊராட்சி ஒன்றிய அலுவலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஊரக புத்தாக்கத் திட்டத்தின் மூலம் கரூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 14 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கு தலா ரூ.1 லட்சம் வீதம் ரூ.14 லட்சமும், மற்றும் 14 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு தலா ரூ.2 லட்சம் வீதம் ரூ.28 லட்சமும் என மொத்தம் ரூ.42 லட்சம் மதிப்பிலான கொரோனா சிறப்பு நிதி உதவித் தொகுப்பினை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (18.06.2020) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் தலைமையில் வழங்கினார்.

பின்னர் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள் தெரிவித்ததாவது:

தமிழக அரசு உலக வங்கி நிதியுதவியுடன் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் மூலம் செயல்படுத்தி வரும் தமிழ்நாடு ஊரக புத்தாக்க திட்டத்தின் மூலம் ஊரக தொழில்களை மேம்படுத்தல், வேலைவாய்ப்பு மற்றும் நிதி சேவைகளுக்கு வழிவகுத்தல் உள்ளிட்ட நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. கரூர் மாவட்டத்தில் கரூர் மற்றும் குளித்தலை ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 27 ஊராட்சிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் மூலம் திட்ட ஊராட்சிகளில் சுய உதவிக்குழு உறுப்பினர் மற்றும் உறுப்பினர்களின் குடும்பங்களைச் சார்ந்தவர்களால் சிறு, குறு மற்றும் ஊரகத் தொழில்கள் நடத்தப்பட்டு வருகின்றன. தற்போது உலகையே அச்சுறுத்தி வரும், கொரோனா வைரஸ் தொற்றினால் ஏற்பட்டுள்ள பொருளாதார பாதிப்பில் இருந்து ஊரகத் தொழில்களை மேம்படுத்துவதற்காகவும், மாற்றுத்திறனாளிகள் மற்றும் நலிவுற்றோரால் மேற்கொள்ளப்படும் வாழ்வாதாரத் தொழிலை மேம்படுத்துவதற்காகவும், உழவர் உற்பத்தியாளர் குழுக்கள், தொழில் குழுக்கள், உழவர் உற்பத்தியாளர் கூட்டமைப்புகள் ஆகியவற்றிற்கு உதவிடும் வகையிலும், பிற பகுதிகளுக்கு புலம் பெயர்ந்து மீண்டும் சொந்த ஊர் திரும்பிய இளைஞர்களுக்கு புதிதாக தொழில் துவங்கிட வழிகாட்டி நிதிஉதவி வழங்கிடும் வகையிலும் தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தில் ரூ.300 கோடியில் சிறப்பு நிதி உதவி தொகுப்பு வழங்கும் சிறப்பான திட்டத்தினை மாண்புமிகு தமிழ முன்னாள் முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் நல்லாட்சி நடத்திவரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்கள். கொரோனா சிறப்பு நிதி உதவித் தொகுப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள நிதி உதவித் தொகுப்பில் கரூர் மாவட்டத்திற்கு சுமார் 1,839 நபர்கள் பயன்பெறும் வகையில் ரூ.3.51 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் முதல் கட்டமாக கரூர் மாவட்டத்தில் கரூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 14 ஊராட்சிகளில் உள்ள கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் பயன்பெறும் வகையில் ரூ.42 லட்சமும், குளித்தலை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 13 ஊராட்சிகளுக்கு ரூ.39 லட்சமும் என ரூ.81 லட்சம் நிதி வழங்கப்பட்டுள்ளது.

சுயஉதவிக் குழுவில் உள்ள தொழில் நிறுவனங்கள் வைத்திருக்கும் தனிநபர்கள், மாற்றுத்திறனாளிகள், கணவனை இழந்தோர், கணவனால் கைவிடப்பட்டோர், திருநங்கைகள், முதிர்கன்னிகள், பழங்குடியினர் போன்ற நலிவுற்றோருக்கு தொழில் நிறுவனங்களை மேம்படுத்தும் வகையில் முதல் தவணை நிதியாக ஒவ்வொரு ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு தலா ரூ.2 இலட்சமும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு தலா ரூ.1 இலட்சமும் வழங்கப்படுகின்றது.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளில் உள்ளவர்கள் இதற்காக வழங்கப்பட்டுள்ள நிதியின் மூலம் சுய உதவிக் குழுவில் தொழில் நிறுவனம் வைத்திருக்கும் தனிநபர் அதிகபட்சம் ரூ. 50,000 வரை நிதி பெறலாம். கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகள் மற்றும் நலிவுற்றோர் தங்களுடைய வாழ்வாதரத்திற்காக அல்லது சிறிய அளவில் செய்து கொண்டிருக்கும் தொழில் வளர்ச்சிக்காக ஒரு நபருக்கு அதிகபட்சம் ரூ.20,000 வரை நிதி பெறலாம்.

உலகையே அச்சுறுத்திக்கொண்டிருக்கும் கொரோனா தொற்றில் இருந்து தமிழ்நாட்டைக் காப்பாற்ற போர்க்கால அடிப்படையிலான நடவடிக்கைகளை எடுத்துவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அதே வேளையில் கொரோனா தொற்றால் தங்களது வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கும் அடித்தட்டு மக்களுக்கும் உதவிடும் வகையில் இதுபோன்ற எண்ணற்ற திட்டங்களை வாரி வழங்கி வருகின்றார்கள். பொதுமக்கள் இதுபோன்ற திட்டங்களை நல்லமுறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூடுதல் இயக்குநர் திருமதி.எஸ்.கவிதா, திருச்சிராப்பள்ளி கூட்டுறவு வங்கித்தலைவர் திரு.ஏ.ஆர்.காளியப்பன், மாவட்ட ஊராட்சித்தலைவர் திரு.எம்.எஸ்.கண்ணதாசன், துணைத்தலைவர் திரு.ந.முத்துக்குமார், நகர கூட்டுறவு வங்கித்தலைவர் திரு.திருவிகா, மகளிர் திட்ட அலுவலர் திரு.சுப்பரமணியன், தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் செயல்அலுவலர் திரு.க.இ.ஆரோன் ஜோஸ்வாரூஸ்வெல்ட், கரூர் ஊராட்சி ஒன்றியக்குழுத்தலைவர் திரு.பாலமுருகன், காதப்பாறை ஊராட்சித்தலைவர் திருமதி கிருபாதேவி, வாங்கல் ஊராட்சித்தலைவர் திருமதி வசந்தி, வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி விஜயலெட்சுமி வட்டாச்சியர் திரு.செந்தில்குமார்(மண்மங்கலம்) கூட்டுறவு சங்கபிரதிநிதிகள் திரு.கமலகண்ணன், திருமதி மல்லிகா, திருமதி ரேணுகா, முன்னால் சட்டமன்ற உறுப்பினர் திரு.காமராஜ் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.